Registered as a Newspaper

O|L
5, 6, 7, 8, 9-ம் வகுப்புகள் ஆரம்பம்
5-1-1987
Bond INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ-1/-

A/L
Economics - Mr கலாகரன்
Accounts - Mr. சௌந்தி
Logic - Mr. கேசவன்
Commerce - Mr. கேதீஸ்வரன்
Hindu Civil / Tamil ) Mr. தாஸ்
Political Science - Mr சிலன்
Geography - Mr. சண்
Bond INSTITUTION
58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடு தை மீ 5 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 17 (18-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுதிர் 44

புலிகளில் ஆறு பேர் வீரமரணம்:

# ஆனையிறவில் கடும் மோதல்

## 8 சிப்பாய்கள் பலி

### மக்களை பணயமாக வைத்து வெளியேற முயன்றனர்

யாழ்ப்பாணம், ஜனவரி 18

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இரண்டு ஹெலிக்கொப்டர் மூலம் வெளியேறி குறிஞ்சாத்தீவுப் பகுதியில் தரையிறங்கிய சிப்பாய்களை நோக்கி நேற்று விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

விடுதலைப் புலிகளில் அறுவர் வீரமரணம் அடைந்தனர். சிப்பாய்களிலும் எட்டுப்பேர்வரை இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

நேற்றுக்காலை 11 மணியில் இருந்து மாலைவரை இம் மோதல் இடம் பெற்றது.

இதேவேளை பல பொது மக்களும் ஆனையிறவு முகாமில் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப் பட்டிருந்தனர்.

"எம்மில் ஒருவர் கொல்லப்பட்டால் உங்களில் இருவரைக் கொல்வோம்" என்று சிப்பாய்கள் இவர்களை எச்சரித்து இருந்தனராம்.

நேற்றைய மோதலின் போது ஹெலிக்கொப்டரில் இருந்தும், முகாமில் இருந்தும் ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

சிபிளேன் ஒன்றும் வட்டமிட்டு சிப்பாய்களுக்குப் பாதுகாப்பு அளித்தது.

விடுதலைப் புலிகளும் விடாது தாக்குதல் நடத்தினர்.

எட்டுச் [சிப்பாய்கள் வரை ஹெலிக்கொப்ட

(4-ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தடை! ஆனால் வாகனங்கள் தாராளம்!!

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்குடா நாட்டில் எரிபொருள் தாராளமாக கிடைக்கிறது.

தனியார் போக்குவரத்துச் சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

அரசின் எரிபொருள் தடை காரணமாக ஸ்தம்பித நிலையில் இருந்த தனியார் மினி பஸ்களும் ஆட்டோக்களும், டாக்சிகளும் மீண்டும் நகரில் ஓடத் தொடங்கியுள்ளன.

வீதிக்கு வீதி எரிபொருள் தாராளமாக கிடைக்கின்றது.

எனினும் விலைதான் அதிகம். விலையும் தினமும் மாற்றமடைந்து வருகின்றது.

நேற்று பெற்றோல் போத்தல் 35 ரூபாவில் இருந்து 40 ரூபாவரை நகரில் விற்பனை செய்யப்பட்டது. (இ-10)

இ-போ-ச

## உள்ளூர் சேவையும் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம், ஜன.18

வட பிராந்தியபோக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை, காரைநகர், டிப்போ பஸ்கள் நேற்று உள்ளூர் போக்குவரத்து சேவைகளை நடத்தின.

எரிபொருள் தடை காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

எனினும் நேற்று இரண்டுசாலைகளின்பஸ்களும் குடா நாட்டுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை நடத்தின. (இ-10)

## பதவி நீக்க கோரிக்கை

அம்பாறை, ஜன. 18

ஐந்தாம் ஆண்டு பாடநூல் தயாரிப்புக் குழுவை பதவி நீக்கம் செய்யும்படி இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் கல்முனைக் கிளை கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது.

இப்பாடநூலில் இஸ்லாமிய மார்க்கத்தை அவமதிக்கும் விதத்தில் படம் ஒன்று பிரசுரமானதும் அதைத் தொடர்ந்து அதன் விநியோகம் இடைநிறுத்தம் செய்யப்பட்டதும் தெரிந்தவையே. (இ-எ-14)

## ஹெலியில் இருந்து துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், ஜன. 18

நேற்று ஹெலிக்கொப்டரில் இருந்து யாழ் நகரப் பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

தமிழன்பர்களே! என்ற தலைப்பில் ஒரு தமிழன்பர் என்ற அடிக்குறிப்புடன் இத் துண்டுப் பிரசுரம் காணப்பட்டது. (இ-10)

## வாகனங்கள் திரும்பின

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று வெளியூர்களுக்குப் புறப்பட்ட பல வாகனங்கள் மீண்டும் திரும்பிவந்தன.

ஆனையிறவில் நடைபெற்ற சிப்பாய்கள் புலிகள் நேரடி மோதல் காரணமாக தொடர்ந்து வாகனங்கள் செல்வதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை. (இ-10)

## வாகனங்களும் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 18

ஆனையிறவில் நேற்று நடைபெற்ற நேரடி மோதல் காரணமாக தடை முகாமில் தரித்து நின்ற பல வாகனங்களும் சேதமடைந்தன.

சுமார் ஐந்து மணி நேரமாக நடைபெற்ற இம் மோதல் காரணமாக லொறிச் சாரதிகளும், கிளீனர்களும் தமது வாகனங்களுக்குக் கீழ் பதுங்கிக் கொண்டனர்.


லொறிகள் பலவற்றின் டயர்களை துப்பாக்கி ரவைகள் துளைத்திருந்தன.

எனினும் நேற்று மாலையின் பின்னர் வாகனங்கள் தொடர்ந்து யாழ் செல்ல சிப்பாய்கள் அனுமதித்தனர்.

சகல வாகனங்களும் நேற்றிரவு எட்டு மணியின் பின்னரேயே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (இ-1)

### சுபநேரம்

18—01—1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.35 முதல் 11.05 வரை
ராகுகாலம்:
5. 05 முதல் 6. 35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



### "சொர்க்க லோகம்"

யாழ்ப்பாண நகரத்தில் கட்டாக்காலிப் பன்றிகள் எண்ணிக்கை இப்போது அதிகம்.

அவை வாகனப் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலைக் கொடுக்கின்றன. அதுமட்டுமன்றி மூளைக் காய்ச்சல் போன்ற ஆபத்தான நோய்கள் பரவவும் காரணமாக இருக்கின்றன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் குப்பைத் தொட்டி ஒன்று பன்றிகளின் சொர்க்கலோகமாக மாறியிருப்பதைப் படத்தில் காணலாம்.

(3ஆம் பக்கத்தில் விவரணக் கட்டுரை)

### சிப்பாய்கள் சொன்னது

யாழ்ப்பாணம், ஜன. 18

"புலிகளின் துப்பாக்கிகளைக் கைப்பற்றிவிட்டோம்!"

".. வர்களின் சென்றிகளை உடைத்துவிட்டோம்."

ஆனையிறவில் நேற்று நடந்து முடிந்த தாக்குதலின் பின் முகாம் திரும்பிய சிப்பாய்கள் அங்கு தடுத்துவைத்தி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் யுவதிகள் பூசாவிலிருந்து நீர்கொழும்புக்கு

கொழும்பு, ஜன. 18

பூஸாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு தமிழ் யுவதிகள் நீர்கொழும்பு [சிறைக்கு மாற்றப்படவிருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை தெரிவித்தார்.

இதனிடையில் விசாரணை பூர்த்தியான தமிழ் இளைஞர்கள் சிலரை விடுதலை செய்யவும் பாதுகாப்பு வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

### ● சிங்கள மீனவர் பற்றி முடிவு இல்லை

கொழும்பு, ஜன.18

வல்வெட்டித் துறையில் கரைசேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பில் தற்போது இருக்கும் திருமலையைச் சேர்ந்த மூன்று சிங்கள

(4ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சைத் தொடர இந்தியா நிபந்தனை

## எரிபொருள் தடையை நீக்குமாறு வலியுறுத்து

புதுடில்லி, ஜனவரி 17

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு இந்தியா இரண்டு நிபந்தனைகளை விதித்திருப்பதாக அறியவந்துள்ளது.

வடபகுதி மீதான எரிபொருள் தடையை நீக்கிவிட வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளில் ஒன்றாகும்.

அண்மையில் புதுடில்லி வந்திருந்த இலங்கை அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா மூலம் இத்தகவல் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளதாம்.

● டிசம்பர் 19-இல் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஏற்றுக்கொண்ட யோசனைகளே அடிப்படையாக இருக்க வேண்டும்.

● வட பகுதி மீதான எரிபொருள் தடை நீக்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படும் பட்சத்திலேயே இந்திய இலை அமைச்சர்கள் இலங்கை அரசுடனான பேச்சுக்களை மீண்டும் தொடர்வர்.

இந்த நிலைப்பாட்டையே இந்திய அரசு எடுத்திருப்

(4-ம் பக்கம் பார்க்க)

### மலையக விடுதலை முன்னணி?

கொழும்பு, ஜன.18

தோட்டப் பகுதியில் 'மலையக விடுதலை முன்னணி' என்று ஒரு இயக்கம் செயல்பட்டு வருகிறதா?

இந்த இயக்கத்தினர் சேகரித்து வைத்துள்ள ஆயுதங்களில் ஒரு பகுதியை மீட்டு இருப்பதாகவும் இதுசம்பந்தமாக பதினைந்துஇந்திய தோட்டத் தொழிலாளர் கைது செய்யப்பட்டனர் என்றுஇரகசியப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ)

## ஓய்வூதியர்கள் நேற்றும்மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ் செயலகத்துக்கு முன்னால் நேற்று இரண்டாவது நாளாக ஓய்வூதியர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

நேற்று சனிக்கிழமை ஆயினும் செயலக ஊழியர்கள் வேலைக்கு வரலாம் எனக் கருதியே மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

காலை ஏழு மணியில் இருந்து பகல் ஒருமணி வரை ஓய்வூதியர்கள் மறியல் செய்தனர் (இ-10)

எரிபொருள் தடை:

## தேசிய பாதுகாப்பு சபை நாளை கூடி முடிவெடுக்கும்

கொழும்பு, ஜன. 18

வடபகுதி மீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடையை நீக்குவது சம்பந்தமாக முக்கிய தீர்மானம் ஒன்று நாளை திங்கள் நடைபெறும் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படலாம்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எரிபொருள் தடையை நீக்க வேண்டும் என்று முக்கிய அமைச்சர்கள் சிலர் வற்புறுத்திவருகின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

புலிகள் சிவில் நிர்வாக நடவடிக்கைகளைக் கைவிடும்வரை எரிபொருள் தடை தொடர்ந்து இருக்கும் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்திருந்தாலும் எரிபொருள் தடையை நீக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படுத்தப் பட்டிருப்பதாக கொழு

(4-ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் தாக்குதல்:

## வாழைச்சேனையில் 2 கொமாண்டோ பலி

யாழ்ப்பாணம், ஜன.18

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தில் இருந்து ஜீப்பிலும் நடந்தும் வந்த பொலீஸ் கொமாண்டோக்கள்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை காலை பலத்த தாக்குதலை நடத்தினர்.

இதில் இரண்டு கொமாண்டோக்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

சந்தைப் பகுதியை நோக்கிகொமாண்டோக்கள் நடந்து வந்த சமயம் தான் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்றும் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

முச்சந்தி முனி



என்ன, நேத்து ஒரு போத்தில் பெற்றோல் 40 ரூபா வித்தது முதல் நாள் 45 ரூபா எல்லே! ஒரு நாளையுக்கை ஐஞ்சு ரூபா குறைச்சல். கள்ளச்சந்தை எண்டா உப்பிடித் தான்...!

## கொழும்புக்குள் நுழையும் வாகனங்கள் கடும் சோதனை

கொழும்பு, ஜன.18

கொழும்பு மாநகருக்குள் நுழையும் வாகனங்களை கடுமையான சோதனைக்கு உட்படுத்தும்படி பொலீஸ் ஆணையாளர் நீல் வீரசிங்கா உத்தரவிட்டிருக்கின்றார்.

கொலன்னாவை எண்ணெய்க்குதத்துக்குச் செல்லும் பௌஸர் வண்டி ஒன்றுக்குள் குண்டு வைத்து அனுப்ப எடுத்த முயற்சி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே பொலீஸ் ஆணையாளரின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனிடையில் குண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வீடொன்றை தெஹிவளையில் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இது சம்பந்தமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-எ-21)

## வீதிகளுக்கு குறுக்கே பாரிய கிடங்குகள்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பல வீதிகளின் குறுக்கே பாரிய கிடங்குகள் வெட்டப் பட்டுள்ளன.

கோட்டை முகாமில் இருந்து சிப்பாய்கள் வெளியேறி தாக்குதல் நடத்துவதை நிறுத்தவும் முகாமில் இருந்து வாகனங்கள் எதுவும் வெளியேறாதவாறு தடுக்கவுமே கிடங்குகள் வெட்டப் பட்டுள்ளன.

ஒவ்வொரு கிடங்கும் நாலு அடி அகலம் பத்தடி ஆழமும் கொண்டவையாக காணப்படுகின்றன.

சங்கிலித் தொடரில் ஓடும் இராணுவ வாக

(4-பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

## தேவை

அனுபவம் வாய்ந்த தொலைபேசி இயக்குநர் (இரவில் கடமையாற்றுவதற்கு) உடன் தேவை அனுபவ விபரங்களுடன் முழுமையான விண்ணப்பத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர். விளம்பர எண்: 49. மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஓவியர் தேவை ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விளம்பர எண்: 47. மே / பா. உதயன், யாழ்ப்பாணம்.

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நூலகத்திற்கு அனுபவமுள்ள நூலகர் உடன் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி; விளம்பர எண். 48, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 20-1-87 செவ்வாய் 6 30 A M


# சிப்பாய்கள் தாக்கிய பின்னரே போராளிகள் தாக்கினர்!

## 7 ஆம் திகதிச் சம்பவம் குறித்து கத்தோலிக்க பிஷப்குழு தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 18

கடந்த 7 ஆம் திகதி யாழ் நகரில் நடந்த சம்பவத்தின்போது சிப்பாய்களே முதலில் தாக்கினர். அதன் பின்பே போராளிகள் தாக்கினர்.

கடந்த 7 ஆம் திகதி யாழ் நகரில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள், விமான, ஹெலித் தாக்குதல்கள் பற்றி, அன்று யாழ்நகரில் தங்கியிருந்த கத்தோலிக்க பிஷப் குழு தனது அறிக்கையில் மேற்கண்ட தெரிவித்துள்ளது.

'ஜனவரி 7 ஆம் திகதி பிற்பகல் வானத் தாக்குதல்கள் யாழ் நகரில் மேற்கொள்ளப்பட்டன.

யாழ் கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பின்னர் போராளிகள் திருப்பித் தாக்கினர்.

இதனால் யாழ் நகரமே ஸ்தம்பிதம் அடைந்தது. இதனால் பிஷப் குழு தனது சந்திப்புக்களை மாற்றி அமைக்கவேண்டி ஏற்பட்டது.

இப்படி கத்தோலிக்க பிஷப் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இத்தாக்குதல்களில் காயமடைந்தவர்களை பிஷப் குழு, யாழ் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டது.

யாழ் நிலைமை பற்றி ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் குழு பேச்சுக்கள் நடத்தியது.

ஷெல் தாக்குதல்கள் காரணமாக ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்ட சேதத்தையும் குழு பார்வையிட்டது.

தற்போதைய நெருக்கடியைத் தணிக்கும் வகையில் குழு, பல்வேறு அமைப்புக்களுடன் மனம் திறந்து பேச்சுக்களை நடத்தியது.

எரிபொருள் தடை காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றி பிஷப் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் காணப்படும் பாதிப்புக்கள் தெரிவிக்கப்பட்டன.

எரிபொருள் தடையால் யாழ்குடாமக்கள் மத்தியில் விரக்தியை ஒரு புறமும், மறு புறம் கடுமையான போக்கையும் வளர்த்துள்ளது.

மிதவாதிகளைக் கூட பாதிக்கக்கூடிய விதத்தில் எரிபொருள் தடையின் தாக்கம் அமைந்துள்ளது.

அதேநேரத்தில் சகலரும் பாதுகாப்புடன், சுயமரியாதையுடன், சுதந்திரத்துடன் வாழக்கூடிய கௌரவத்துடனான சமாதானம் வரவேண்டும் என்ற பரவலான இறைஞ்சுதலை சகலரிடமும் காணமுடிகிறது.

இப்படி அந்த அறிக்கையில் கத்தோலிக்க பிஷப் சபை தெரிவித்துள்ளது.

யாழ் வந்த பிஷப் குழுவுக்கு கத்தோலிக்க பிஷப்கள் சங்கத்தலைவர் பேராயர் எப். மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமை வகித்தார்.

அனுராதபுரம் ஆயர் எச். குணவர்த்தன, உதவிச் செயலாளரான வணபிதா. நீல் டயஸ் கருணாரத்தின ஆகியோர் குழுவில் அங்கம் வகித்தனர்.

அறிக்கையில் போராளிகள் என்ற சொல் பாவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-எ)

## ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவாவோர் எண்ணிக்கை அதிகரிக்கும்

பலாலி, ஜன. 18

புதிதாக ஆசிரியர் பயிற்சிக்காக தெரியப்பட்ட ஆசிரியர்களது எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர், திரு சிவஞானம் அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவுப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகவே இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

பயிற்சிக்காக விண்ணப்பித்து தகுதியிருந்தும் தெரிவுசெய்யப் படாத ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைக்காக மிகவிரைவில் அழைக்கப்படவுள்ளனர். (இ-119)

## டாக்டருக்கு சம்பளம் ரூபா பத்தாயிரம்! ஆனால் வேலைசெய்ய ஆள் இல்லை!!

கொழும்பு, ஜன 18

கந்தளாய் ஆஸ்பத்திரியில் கடமையாற்றச் செல்லும் டாக்டர்களுக்கு சம்பளத்துடன் ஒவ்வொரு மாதமும் பத்தாயிரம் ரூபா இடைக்கால அலவன்ஸாக வழங்க சுகாதார அமைச்சு முன் வந்து உள்ளது.

அப்படி இருந்தும் ஒரு டாக்டராவது கந்தளாயில் சேவையாற்ற முன்வரவில்லை.

கந்தளாய் ஆஸ்பத்திரி தற்போது மூடப்பட்டு உள்ளது.

கந்தளாயில் உள்ள மத்திய வைத்தியசாலையில் ஒரே ஒரு உதவி வைத்திய அதிகாரிதான் பணி புரிகிறார்.

கோமரங்கடவல, திப்பாய், சேருவில முதலிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணியாற்ற விரும்பும் வைத்திய அதிகாரிகளிடமிருந்து சுகாதார அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

(உ-எ)

## விடுமுறைக்கு வந்தோர் திரும்பிச்செல்ல பஸ் வசதி

யாழ்ப்பாணம், ஜன 18

தைப்பொங்கல் விடுமுறைக்கு யாழ். வந்த அரச ஊழியர்கள் திரும்பிச் செல்வதற்காக வட பிராந்திய போக்கு வரத்துச் சபை மட்டக்களப்பு, ஹபறணை, வவுனியா, ஆகிய இடங்களுக்கு விசேட பஸ் சேவைகளை இன்றுமுதல் நடத்தவுள்ளது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்புக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஞாயிறு காலை இரண்டு பஸ்கள் விடப்படும்.

காலை 4-15 மணிக்குப் புறப்படும் பஸ்ஸிற்கு ஆசனப் பதிவுகளைச் செய்ய முடியாது.

காலை 4.30 மணிக்குப் புறப்படும் பஸ்ஸிற்கு ஆசனப் பதிவுகளைச் செய்யலாம்.

### திருகோணமலை

திருகோணமலை செல்லும் பயணிகளின் நலன் கருதி ஞாயிறு காலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஹபறணை வரை பஸ் ஒன்று செல்லும் இதற்கு ஆசனம் பதிவு செய்ய முடியும்.

### கொழும்பு

கொழும்பு செல்லும் பயணிகளின் நலன் கருதி யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு ஞாயிறு, தாராளமாக பஸ் சேவைகள் நடத்தப்படும்.

இப்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-எ)

## கன்றுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஜன. 18

எப் ஜ 1இன் மிளகாய்க் கன்றுகள், மார்குளோப் இன தக்காளிக் கன்றுகள் திருநெல்வேலி கத்தரிக்கன்றுகள் திருநெல்வேலி உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் விற்பனைக்கு உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

மக்கள் முகம்

## குருநகர் புதிய சந்தை வர்த்தகசங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 18

குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும், வருடாந்தப் பொதுக் கூட்டமும் கடந்த திங்கள் இடம் பெற்றது

தற்காலிகத் தலைவர் திரு கா. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

புதவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: செ அல்போன்ஸ். செயலாளர்: க சி கிருஷ்ணன், பொருளாளர்: கி இராசலிங்கம், உபதலைவர்: எஸ். யோகேஸ்வரன், உப செயலாளர்: அ. சாள்ஸ். செயற்குழு: அ. பிலிப், சோமஸ் கந்தராஜா, ஐ சிவனேசன், இ காதர்பாக்கீர், ம. ஸ்ரீசரன், இ. பூலோகசிங்கம், கா. பாக்கியநாதன், தா. செல்வம், கா. சுப்பிரமணியம், எஸ். கே. செல்வா.

(இ-எ)

## நன்றியுணர்வு, ஒற்றுமையை ஏற்படுத்த பொங்கல் விழா

### உதவி அரச அதிபர் உரை

சுன்னாகம், ஜன 18

மக்களிடையே நன்றியுணர்வையும்- ஒற்றுமையையும் ஏற்படுத்த பொங்கல் விழாக்கள் உறுதுணையாக இருக்கின்றன. இளைஞர்களுக்கிடையே ஒற்றுமை மிக அவசியமாகியுள்ள வேளையில் ஐயனார் சனசமூக நிலையம் இதுபோன்ற பயன்மிகு விழாக்களை எடுத்தது பாராட்டப்பட வேண்டியதே.

உடுவில் உதவி அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்

சுன்னாகம் ஐயனார் சனசமூக முன்னேற்ற கழகத்தின் பொங்கல் விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நிலையத் தலைவர் திரு. மு. நடராஜா தலைமையில் நடந்த விழாவில் சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலைய தலைவர் திரு. சபா. புஷ்பநாதன் பேசுகையில் கணணியா மாதவியா கற்பில் சிறந்தவர் போன்ற கருத்தரங்குகளை நிறுத்தி விட்டு நவீன விஞ்ஞான யுகத்துக்கு மக்களை அழைத்துச் செல்லவேண்டிய பொறுப்பு சனசமூக நிலையங்களிடம் விடப்பட்டுள்ளது என்றார்.

வைத்திய கலாநிதி ஆ. நடராஜா பேசுகையில் 'தெருவிளக்குகளை ரியூப் லைட் ஆக பொருத்தியமைக்காக ஐயனார் சனசமூக நிலையம் பாராட்டப்பட வேண்டும்' என்றார்.

விமர்சனங்கள் மக்களின் நன்மைக்காகவே செய்யப்பட வேண்டும் என 'வீரகேசரி' பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச்செல்வன் கூறினார்.

அதிபர் திரு. மு. நாகேந்திரம், பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. சி குமரவேல், விளையாட்டு பிரிவு அதிகாரி திருமதி வி. கெங்கேஸ்வரன் உட்பட பலரும் உரையாற்றினர்.

கலை நிகழ்ச்சிகளும் நாடகம், கவியரங்கும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன.

(இ-27)


## பிரயாண ஒழுங்குகள்

- நோர்வே
- லண்டன்
- ஜேர்மனி
- சிங்கப்பூர்
- அவுஸ்திரேலியா
- சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாண ஒழுங்குகளை உடனுக்குடன் செய்துகொள்ள உடனடியாக எமது அலுவலகத்தில் சந்தித்து பதிவுசெய்து கொள்ளவும்.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS

றை ஸ்ரார் றவல்ஸ்

இல 6, நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.

மு.கு. யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலுவலகம் மூடப்பட்டிருந்தால் உங்கள் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்ட கீழ்வரும் முகவரிகளில் தொடர்புகொள்ளவும்.

1. 71, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. வ. குகராசா, மயிலியற்புலம், கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
3. ந. தயாளன், மயிலணி வடக்கு. சுன்னாகம்.


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## நகரில் குப்பை கூளம்: எரியுங்கள் அல்லது புதையுங்கள்

### ஆணையாளர் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜன 18

குப்பை கூளங்களை வெட்டிப் புதையுங்கள் அல்லது எரியுங்கள்.

யாழ் மாநகர சபை ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கோரி உள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு:-

ஜனவரி முதலாம்திகதி தொடக்கம் அரசினால் அமுல் செய்யப்பட்ட எரிபொருள் தடை காரணமாக மாநகராட்சி மன்ற நகரசுத்தி வாகனங்களைப் பாவிக்க முடியாத நிலை எழுந்துள்ளது

இருப்பிலிருந்த எரிபொருளைக் கொண்டு ஆறும் திகதிவரை சேவையாற்றக் கூடியதாக இருந்தது

அதற்குப் பின் நகரின் எல்லாப் பாகங்களிலும் உள்ள குப்பை கூளங்களை அகற்ற முடியாத நிலை இருந்து வருகிறது.

நாளாந்தம் சுமார் 30 டிராக்டர் லோட் குப்பை கூளங்கள் மாநகராட்சி மன்றத்தால் அகற்றப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த 10 நாட்களில் சேர்ந்த குப்பை 300 லோட் வரை கணக்கிடப்படலாம்

இதே நிலையில் குப்பை கூளங்கள் நகரில் குவிவது பாரிய சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தும் என்பதை எல்லோரும் உணர்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணிகளால் எழுந்த இந்த இக்கட்டான நிலையைக் கூடுமானவரை சமாளிக்க வேண்டிய பொறுப்பு நகர மக்கள் ஒவ்வொருவரினதும் ஆகும்.

எனவே தற்போதிருக்கும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மாநகர குடியிருப்பாளர்கள் யாவரும் தத்தமது வீடுகளில் சேரும் குப்பைகளை வீதிகளில் போடாமல் தத்தமது வளவுகளுக்குள்ளேயே குழிகளை வெட்டிப் புதைத்து விடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அப்படிக் குழிவெட்டிப் புதைக்க வசதியில்லாதவர்கள் தமது வளவுகளில் சேரும் குப்பைகளை அங்கேயே எரித்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாநகரமக்கள் சுகாதார நலன்கருதிதொற்று நோய் பரவாமல் இருக்கவும், அப்படி ஒரு நிலை ஏற்படும்போது அதையும் நாமே சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையும் தற்போது எதிர்நோக்குவதால் இந்தவிடயத்தில் எல்லா நகர் வாழ் மக்களினதும் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

## டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன 18

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட 1986ஆம் ஆண்டுக்கான கல்வியியலில் பட்டப்பின்படிப்பு டிப்பிளோமாக் கல்வி நெறிக்கான பரீட்சையின் பெறுபேறுகளில் ஒரு பகுதி கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உதயனில் வெளிவந்தது

இதன் இறுதிப் பகுதி இங்கு வெளிவருகிறது

திருமதி கி. கந்தசாமி திருமதி தி. கிருபாகரன் திருமதி. வி லக்ஸ்மணன் வி. மகேந்திரன் திருமதி எஸ். மகேஸ்வரநாதன் திரு. ரி. எவ் மனோஹரன், திருமதி எஸ். முத்துலிங்கம், திரு எஸ். நடராசா, திரு ஏ. நாகரட்ணம் திரு கே. பரநிருபசிங்கம் திருமதி வி. பசுபதிப்பிள்ளை திருமதி எம். பற்குணம், திருமதி பி. பேரம்பலம், திரு. எஸ். பொன்னம்பலம், திருமதி சி. ராஜரட்ணம், திரு. எம். ராஜரத்தினம், திருமதி பி. செல்வரட்ணம், செல்வி ஜி. சிங்கராயர், திருமதி பி எவ் சின்னத்துரை, செல்வி தி. சின்னத்துரை, திரு. எம். சின்னத்தம்பி திருமதி தி. சிதம்பரநாதன். திருமதி ஏ. சிவஞான சுந்தரம், திருமதி ஆர். சிவகுருநாதன், திரு எஸ்- சிவநாயகமூர்த்தி, திருமதி ஆர். சிவராஜ், திருமதி தி. சிவராஜ் திரு, எஸ். சுகுமாரன், திருமதி சி. சுந்தரலிங்கம், திரு. பி. சுந்தரலிங்கம், திரு எஸ். சுந்தரேசன், திருமதி எஸ் திருநாவுக்கரசு, செல்வி எம் எஸ். தோமஸ், திருமதி தி. துரைராசா, திரு தி துரைசிங்கம், செல்வி கே. வீரசிங்கம், திரு. வி. வில்லவராஜன்.

நூலசித்தி: செல்வி எஸ் இராசதுரை (கல்வி உளவியல் நூலசித்தி).

(உ-10-119)

## வந்தாறுமூலையில் இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஜன. 18

தைப்பொங்கல் அன்று ரோந்து சென்ற ஆயுத படையினர் வந்தாறுமூலையில் ஓர் இளைஞரைச் சுட்டுக் கொன்றனர்.

இளைஞனின் சடலத்தை படையினர் அகற்றிச் சென்றனர்.

இதனிடையில் ஆனைப்பந்தி என்னும் இடத்தில் படையினரைக் கண்டு ஓடிய ஐந்து தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். விசாரணையின் பின்னர் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர். (உ-எ-21)

## தருமபுரம் மக்கள் குடி தண்ணீர் கஷ்டம் நீங்கும்

விசுவமடு, ஜன. 18

தருமபுரம் பகுதி மக்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் குடி தண்ணீர்க் கஷ்டம் மிக விரைவில் நிவர்த்தி செய்யப்படவுள்ளது.

இப்பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற்காக ஒரு லட்சத்து [illegible] பதினாயிரம் ரூபா செலவில் திட்டம் [illegible] விரைவில் ஆரம்பிக்கப்படும்.

கிளிநொச்சி பரந்தன் ரோட்டறிக் கழகத்தினரின் அயரா முயற்சியினால் வெளிநாட்டிலிருந்து இப்பண உதவி கிடைத்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தைக் கிளிநொச்சிப் பகுதி பிரதேசபொருளாதார அபிவிருத்திக் கழகத்தினர் தமது கண் [illegible] னர்.

(இ-166)

## சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஜன 18

மன்னார் தள்ளாடி முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த செவ்வாய் தன் [illegible] தற்கொலை செய்துகொண்டார்.

சிப்பாயின் பெயர் றொட்றிகோ. (உ-ஐ-எ)

## மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம் ஜன. 18

யாழ் பல்கலைக்கழகத்திலும், யாழ் தொழில் நுட்பக் கல்லூரியிலும் நேற்றுமுன்தினம் மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

யாழ்குடா நாட்டுக்கான அரசின் எரிபொருள் தடையைக் கண்டித்தே இந்தப் பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

## ஆலய சுற்றுடல் அசுத்தம்

கரவெட்டி, ஜன. 18

கரவெட்டியில் பிரபல்யம் வாய்ந்த மேற்கு கிராய் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் பெரும் தொகையான ஆடு மாடுகளின் எலும்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

இந்தத் தூய்மையான ஆலயத்தின் மூன்றும் வீதியில் கொட்டப்பட்டுள்ள எலும்புக் கூடுகளினால் ஆலயச் சூழல் அசுத்தமடைந்திருப்பதாக பக்தர்கள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர். (உ-70)

## வண்டியில் அதிஷ்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து யாழ் நகரில் மாட்டுவண்டியில் சுவீப் விற்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரின் பிரதான வீதிகளில் மாட்டு வண்டியில் 'அதிஷ்டம்' சுற்றித்திரிகிறது. (உ-10)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

மொத்தக் களஞ்சியம் ஒன்று அமைப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம்ஒன்று யாழ் தேசியக் கூட்டுறவுச் சபையின் ஆதரவில் இன்று ஞாயிறு காலை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

தேசியக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சி. சிவமகாராசா இப்படி அறிவித்துள்ளார்.

## மலேசியா பயணமானர்



யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் ஆறுமுகம்- சிவரட்ணம் மலேசியா பயணமானார்.

மலேசியா போட்டிக்சன் மாரியம்மன் கோவில் பரிபாலனசபையாரின் அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ள அவர் அங்குள்ள ஆலயங்களுக்கு சித்திரத் தேர் செய்யவும், மற்றும் சிற்ப நுட்பம் நிறைந்த ஆலய வேலைகள் செய்யவும் தமது உதவி ஆட்களையும் அங்கு அழைக்கவிருக்கிறார்.

இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள ஆலயங்களுக்கும் சித்திரத்தேர்களை உருவாக்கிய இவர் சிற்பக்கலாமணி, சிற்பரத வித்தகன், சிற்பரத சிகாமணி எனவும் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கத்தின் தலைவராக விளங்கும் இவர் மாயமலபுரத்தில் சிற்ப சாஸ்திர நுட்பங்களைக் கற்றறிந்த நுண்கலைஞருமாவார்.

(இ-101)


ON SALE

New Class Work Book FOR ENGLISH 7

YEAR SEVEN

Based on "ENGLISH EVERY DAY"

Publishers:

Gnanachurabi Book Company

217, Power House Road, JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

நீங்கள் அனைவரும் ஒரு மரத்தின் இலை கள், ஒரு கடலின் நீர்த்துளிகள்''

— பஹாஉல்லா — கடவுளின் மகிமை

உதயன்
உண்மை - நிதானம் - ஒருமைப்பாடு
இல,15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 18-01-1987 த. பெ இல 28

## சுவிஸிலிருந்து தமிழர் ....!

சுவிட்சர்லாந்தில் இருந்து 40 ஈழத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட இருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, ஏற்கனவே எடுத்த முடிவை மாற்றிக்கொள்ள அந்த நாட்டு அரசாங்கம் மறுத்துவிட்டது.

சம்பந்தப்பட்ட தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, உலக கிறிஸ்தவ சபை, மனிதஉரிமை சபை ஆகியன வேண்டுகோள் விடுத்திருந்தன.

சுவிஸ் அரசிடம், அதனது முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு மேற்படி சபைகள் கேட்டிருந்தன. ஆனால் அது தனது அழுங்குப் பிடியை விடுவதாக இல்லை.

அகதிகளை ஏற்றுக்கொள்வதும், அங்கீகரிப்பதும், அவர்களுக்கு உதவுவதும் மனித பிமானம் சம்பந்தப்பட்டது. அது குறித்து முடிவு செய்யும் முழுப்பொறுப்பும் அகதிகளுக்குப் புகலிடம் வழங்கிய நாட்டையே சார்ந்ததாகும். அதில் தலையிடவோ அல்லது நிர்ப்பந்திக்கவோ கட்டாயப்படுத்தவோ எவருக்கும் உரிமையில்லை.

ஆனால் தமது அரசின் முடிவை நியாயப் படுத்தும் விதத்தில் சுவிஸ் நீதி அமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் பெரும் விசனத்துக்குக்கு உரியனவாகும்.

✻ ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அகதிகள் 26 பேரும் எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகாமல் இலங்கையில் வசிக்கிறார்கள்.

✻ ஏழு லட்சம் தமிழர்கள் தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியில் நிம்மதியாக வாழ்கிறார்கள்.

✻ தீவிரவாதிகளுடன் தொடர்பு இல்லாவிடில் தமிழர்களுக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படாது.

இந்த மூன்று காரணங்களையும் நன்றாக ஆராய்ந்து உண்மை நிலையைத் தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் உருவாகி உள்ளது. ஏனெனில் இதே காரணங்களை முன் உதாரணமாகக் காட்டி ஏனைய நாடுகளும் அங்குள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடிய ஆபத்து உண்டாகும்.

சுவிஸிலிருந்து ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் இளைஞர்கள் தென்னிலங்கையில் புனர்வாழ்வு என்ற பெயரில் அரசாங்கக் கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அனேகமாக அவர்கள் சிறை வைக்கப்பட்ட நிலையில்தான் உள்ளார்கள்.

அவர்கள் சங்கடமின்றி வாழவேண்டுமானால் தமது பெற்றோருடன் அல்லது உறவினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்கப்பட வேண்டும். 26 பேர்களில் ஒருவராவது அவ்வாறு சாதாரண — வழமையான வாழ்க்கை நடத்த அனுமதிக்கப்படவில்லை என்பதே எமக்குக் கிடைத்த தகவலாகும்.

அவர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்களா என்பதை ஊர்ஜிதம் செய்யமுடியாமல் இருப்பினும், பணயக் கைதிகளாகவே தென்னிலங்கைப் புனர்வாழ்வு முகாம்களில் வைத்திருக்கப்படுகிறார்கள் என்பது மட்டும் தெளிவானதாகும்.

பணயக் கைதிகளாக வைத்திருக்க விரும்பாவிடின் அல்லது பழிவாங்க திருக்க நினைத்திருப்பின் அரசாங்கம் அவர்களை தென்னிலங்கையில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. பெற்றோரோடு அல்லது உறவினரோடு சேர்ந்து வாழ விட்டிருக்கலாம் அல்லவா?

இரண்டாவதாகக் காட்டப்பட்ட காரணம் வெறும் மாயையானது. 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழர்கள் தென்னிலங்கையில் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பது வெறும் அபத்தமானதாகும்.

கொழும்பில் பிறந்து வளர்ந்த தமிழர்கள் கூட தமக்கு எப்போது ஏது நடக்குமோ என்ற பீதியுடன்தான் வாழ்கின்றார்கள். மாலை ஆறு, ஏழு மணிக்குப் பின்னர் வீட்டுக்கு வெளியே நடமாட அஞ்சும் நிலையிலேயே வாழ்கின்றார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆயுதப் படையினருக்கு பெரிதாகச் சேதம் ஏற்படக்கூடிய சம்பவம் எதுவும் நடப்பின், தமக்கு என்னாகுமோ என்ற மனப் பயத்துடன் வாழ்கிறார்கள். இந்த உண்மை நிலையை இலங்கை அரசு நிச்சயம் சுவிஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்க மாட்டாது. கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் சுயேச்சையான ஓர் ஆய்வை மேற்கொண்டால் நிலைமை நிதர்சனமாகும்!

மூன்றாவது காரணம் முழுக்க முழுக்க யதார்த்த பூர்வம் அற்றது. தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் சம்பவங்கள் சுவிஸ் அரசுக்குச் சரியாகத் தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாகின்றது.

தமிழ் மண்ணில்—

வீதியால் போகும் முதியவரும், வீட்டில் இருக்கும் பெண்மணியும், பாடசாலை செல்லும் மாணவனும் அரசாங்கப் படைகளின் துப்பாக்கிச் சூட்டுக்கும், ஷெல் தாக்குதல்களுக்கும் இரையாகிறார்கள். அவர்கள் எல்லோரும் தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டதால்தான் அந்தக் கதி ஏற்பட்டதாகச் சுவிஸுக்குக் காட்டப்பட்டதா?

1981 ஆம் ஆண்டிலிருந்து 1986 டிசம்பர் வரை 15,217 தமிழர்கள் அடாவடித்தனங்களால் உயிரிழந்திருக்கிறார்கள் என்பது சுவிஸ் அரசாங்கத்துக்குத் தெரியாமற் போயிருக்க வேண்டும்.

எனவே தமிழ் அகதிகளைத் தன்னால் பராமரிக்க முடியாது என்று சுவிஸ் அரசு கருதினால், அவர்களை நேரடியாகத் தமிழ் மண்ணுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைப்பது நல்லது. திருப்பி அனுப்புவதாகக் கூறி அரசாங்கத்திடம் ஒப்படைப்பது மனிதாபிமானமற்றதாகும்.

ஞாயிறு விவரணச் சிறப்பம்சம்

# யாழ்.நகரில் பன்றிகளின் தொல்லை;

# மூளைக்காய்ச்சல் பரவ முக்கிய காரணி

**எஸ். யே. பி. ரட்ணதுரை**

யாழ் நகரின் பிரதான வீதிகளில் ஒன்றான விக்ரோரியா வீதியில் போக்குவரத்துக்கள் திடீரென ஸ்தம்பிதமடைந்தன.

முன்னால் நிற்பவற்றை முந்தமிட்டபடி வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து நின்றன.

எனது சைக்கிளைச் சட்டென நிறுத்தி முன்னால் நின்ற மினிபஸ் சாரதியிடம் 'என்ன விடயம்?' என வினவினேன்.

'பின்னைத்தாச்சி ஒன்று வீதியைக் கடக்குது. அதுதான் வாகனங்கள் வழிவிட்டு நிற்குது.' பொறுப்போடு சொல்லி பொறுமையிழந்து ஹோர்ண் அடிக்கலானார்.

எட, கர்ப்பிணிகளுக்கு வழிவிட்டு வாகனம் ஓடும் அளவுக்கு வடபகுதி சாரதிகள் திருந்திவிட்டார்கள் போலும்; ஷெல் அடிக்குப் பயந்து கர்ப்பிணிகள் சிகிச்சைக்கு வைத்தியசாலையின் பின் வீதியால் சென்று வருகிறார்கள் போலும்; எனக்குள் எண்ணியபடி எனது சைக்கிளை வாகனங்களுக்கு இடையே இருந்த இடைவெளியூடே உருட்டிச் செல்கிறேன்.

முன்னேறி முன்னே சென்று, முதல் வாகனம் அருகே நின்று பார்க்கிறேன். அங்கே நான் கண்ட காட்சிகள், என் கண்கள்தான் சாட்சிகள்.

அங்கே ஒரு பிள்ளைத்தாச்சிப் பன்றி தன் பன்றிப் பரிவாரங்களுடன் பாத யாத்திரை போய்க் கொண்டிருந்தது.

தங்களால் தடைப்பட்டிருக்கும் வாகன போக்குவரத்தைப் பற்றி கவலையின்றி சாரதிகளுக்குப் போக்குக் காட்டியபடி 'வாக்' (walk) போய்க் கொண்டிருந்தன பன்றிப் பரிவாரங்கள்.

வீதியில் நின்ற ஆண் சிங்கங்கள் எல்லாம் பன்றிகள் மீதிருந்த அசிங்கத்தைக் கண்டு அவற்றின் அருகே சென்று அவற்றை அப்பால் கலைக்க அஞ்சினர்.

பாதசாரிகள், வாகன சாரதிகள் பொறுமை யிழந்து அந்தச் சினைப் பட்ட பன்றிகள் மீது சினப்பட்டு நின்றனர்.

யாழ் பெரியகடைக்கு போதனா வைத்தியசாலையின் முன் வீதியால் சென்றால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு செல்லவேண்டியுள்ளது; வீதியால் சென்றால் மூக்கைப் பிடித்துக் கொண்டு செல்லவேண்டியுள்ளது.

அந்த அளவுக்குப் பன்றிகள் படையெடுப்பு நாற்றமெடுக்கிறது.

### கழிவு அறை

யாழ் போதனா வைத்தியசாலையின் குப்பை கொட்டும் கழிவு அறை விக்ரோரியா வீதியிலேயே அமைந்துள்ளது.

அந்தக் குப்பைக் கழிவறையைப் பன்றிகள் தமது சேற்றுக் குளியலறையாகப் பயன்படுத்துகின்றன.

அந்த அறைக் கதவையே அலகுகளால் உடைத்துவிட்டுப் பன்றிகள் உள்ளே செல்ல, அறைக்குக் "குட் பை" சொல்லிவிட்டு குப்பைகள் வீதிக்கு வந்துவிடுகின்றன.

மாநகரசபையின் குப்பை அள்ளும் லொறி போல் விக்ரோரியா வீதி எங்கும் குப்பைகளை விதைத்துச் செல்கின்றன பன்றிகள்.

### இலாபகரமான தொழில்

இன்று பன்றி வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழிலாகக் கணிக்கப்படுகின்றது.

காரணம், அவை கழிவுகளை உணவாக உட்கொள்வதுடன், மிக விரைவாக இன விருத்தியடைகின்றன.

அவற்றை வளர்ப்பவர்களும் அவற்றை அடைத்து வளர்க்காமல் அவிழ்த்துவிடுகிறார்கள்.

கட்டாக்காலிப் பன்றிகளால் பொது மக்களுக்கு சந்திகள், சந்தைகளில் பெருஞ் சங்கடங்கள் ஏற்படுகின்றன.

அவற்றிடமிருந்து அவர்கள் தமது ஆடைகளை அசுத்தமாக்காது வீதிகளில் விலகி வருவதென்பது கஷ்டமான காரியம்.

கட்டவிழ்த்த படையினர்போல் கட்டாக்காலிப் பன்றிகளும் மக்களை மாக்களாகவே மதிக்கின்றன.

ஆட்களைக் கண்டதும் மூர்க்கத்துடன் முட்ட வருகின்றன.

செல்லுமிடமெல்லாம் சேற்றை வாரியடித்தபடி நோய்க்கிருமிகளை வீதிகளில் விதைத்துச் செல்கின்றன.

கடைகளில் உள்ள கழிவு உணவுகளை உண்ண வரும் பன்றிகளால், பலகாரப் பதார்த்தங்களுடன் பக்டீரியாக்களும் பரிமாறப்படுகின்றன.

பத்திரிகைகளில் பன்றிகள் பற்றிய செய்திகள் அண்மைக் காலத்தில் அடிக்கடி அடிபடுகின்றன.

''மகாவலித் திட்டப் பிரதேசத்தில் பன்றி வளர்க்கத்தடை. மகாவலித் திட்டச்சபைத் திட்டம்.

'சென்னையில் பன்றியொழிப்பு இயக்கம், மாநகரசபை நடத்தியது'.

'பன்றிகளால் மூளைக் காய்ச்சல்நோய் பரவும் அபாயம் வடபகுதி வைத்திய அதிகாரிகள் அச்சுறுத்தல்'.

இப்படி தினசரி தினசரிகளில் வரும் பன்றிபற்றிய செய்திகளையிட்டு அசட்டையாக இருக்கக் கூடாது.

இன்று வடபகுதியில் உள்ள வைத்திய வசதிகள், வைத்தியசாலைக்குச் செல்லும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்நிலையில் வடபகுதியில் இந்நோய் பரவுமானால் நாம் சரித்திரத்திலேயே சந்தித்திராத துக்ககரமான நிகழ்வுகளாக அதன் விளைவுகள் அமையும்.

மூளைக் காய்ச்சல் 1985ஆம் ஆண்டு சிலாபப்பகுதியில் 500க்கு மேற்பட்டோர் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 100க்கும் அதிகமானோர் மரணமடைந்ததையும் நாம் மறந்துவிடக் கூடாது.

மூளைக்காய்ச்சல் நோய் வந்தவர்களில் பாதிப் பேர் இறந்துவிடுகின்றனர். மீதிப்பேர் ஊனமுற்றவர்களாக உலகில் நடமாட வேண்டியவர்களாகின்றனர். எந்தவித பாதிப்பும் இல்லாமல் பிழைப்பவர்கள் அரிது.

வருத்தம் வந்தபின் வருந்துவதை விடுத்து வருமுன் காப்பது நன்று.

இதுதொடர்பாக யாழ் போதனா வைத்தியசாலையின் சுகாதாரப் பரிசோதகர் திரு வி தவராஜாவுடன் தொடர்பு கொண்டபோது அவர் அந்நோய்க்கும் பன்றிகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிக் கூறியதைத் தொகுத்துத் தருகின்றேன்.

மூளைக்காய்ச்சல் நோய் வைரஸ்கிருமிகள் மூலமே பரவுகின்றது. பன்றிகளில் வைரஸ் கிருமிகள் இலகுவில் பெருகக்கூடியன.

பன்றிகளின் உடல் வெப்பநிலை அதிகமானது. இதனால் நுளம்புகள் பன்றிகளில் மொய்ப்பது அதிகமாகின்றது.

மூளைக் காய்ச்சல் நோயைப்பரப்பும் குயிலிசின் நுளம்புகள் வடபகுதியில் அதிகம் காணப்படுகின்றன.

எனவே பன்றிகளும் நுளம்புகளும் சேர்ந்தால் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

மேலும் பன்றி இறைச்சியைப்பலர் இன்று விரும்பி உண்கின்றனர்.

### நாடாப் புழு

பன்றி இறைச்சியில் நாடாப்புழுக்கள் அதிகம் காணப்படுகின்றன.

இவை இரத்தத்தை உறுஞ்சி இரத்த சோகை உண்டுபண்ணுவதுடன், அமீனியா, இரத்தப் புற்றுநோய் உண்டாக மூல காரணமாகின்றன.

பன்றி இறைச்சியை அதிகம் வேக வைக்காது உண்பதால் பலர் இவ்வகை நோய்களுக்கு ஆளாவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

எனவே பன்றி இறைச்சி உண்பதை நாம் நிறுத்துவதும் பன்றிகளைக் கட்டாக்காலிகளாக வளர்ப்பதைத் தடுப்பதும் அவசியம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வடபகுதியில் வைத்திய சேவைகளின் வசதி குறைந்துள்ள இந்நிலையில் வருத்தங்கள் வந்தபின் வருந்துவதைவிட வருமுன்காப்பதே நன்று.

### கட்டாக்காலி பன்றிகள் பிடிக்கப்படும்

யாழ் மாநகரசபை ஆணையாளரிடம் கட்டாக்காலிப் பன்றிகள் பற்றி வினவியபோது;

விக்ரோறியா வீதியில் உள்ள வைத்தியசாலையின் கழிவறையின் முன்புறமாக தற்போது சிமெந்து பூசப்பட்டுள்ளது.

இதனால் பன்றிகள் அவ்விடத்தைச் சேருவதைத் தவிர்த்துள்ளோம்.

மேலும்கட்டாக்காலிப் பன்றிகளைத் தொலைக்க மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதலில்கட்டாக்காலிப் பன்றிகள் பிடிக்கப்படும், பின்னர் நஞ்சூட்டிக் கொல்லப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)



பொய்யாமொழி

குறள்.

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

பொருள்:

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் ஒழியாமல் வருகின்ற பிறவித்துன்பத்தை உண்டாக்கும் வித்து, அவா என்று கூறுவர்.

# உலகமத தினம்

**க.செ. சுவர்ணராஜ்**
தேசிய ஆன்மீக சபை உறுப்பினர், பஹாய் சமயம்.

பஹாய் சமயத்தின் உலக மத்திய நிலையத்தினால் நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது உலக மத தினம்.

இன்று ஏறக்குறைய எழுபது நாடுகளினால் ஜனவரி மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையில் அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது.

உலக மத தினத்தின் அடிப்படைநோக்கம்சகல மதங்களுக்கும் பொதுவான அடிப்படைத் தத்துவங்களாக அமைந்திருக்கும் பொது உடன்பாட்டுக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளித்து மதங்களிடையே ஒத்திசைவையும் உடன்பாட்டையும் வளர்ப்பது ஆகும்.

ஒரு மூலத்திலிருந்து தோன்றியது மனித குலம். நிற, இன, தேசிய, மத, மொழி ரீதியாக பிளவுபட்டிருக்கின்றது.

இவ்வாறு பிளவு பட்டிருக்கும் மனித குலத்தை, ஆண்டவனின் இக்காலக் கட்டளைக்கமைய சகல வித துவேஷங்களையும் கடந்து ''நாம் அனைவரும் ஒரு மரத்தின் இலைகள், ஒரு கடலின் நீர்த்துளிகள்'' என்ற பஹாஉல்லாவின் – கடவுளின் மகிமை – கூற்றுக்கமைய ஒன்று பட வேண்டும் என்பதே உலகமத தினச் செய்தி ஆகும்.

மனித குலத்தின் ஒற்றுமையும், உண்மையான சமத்துவமும், அவர்களின் கடந்த கால மூலத் தோற்றங்களில் அல்லாது, எதிர் காலத்தில் அவர்களின் இலக்குகளாகிய எப்படி திருந்தி எப்பாதையில் செல்கின்றோம் என்பதிலேயே தங்கியுள்ளது.

காலங்காலமாக மனிதனுக்கிடையே இருந்து வரும் முரண்பாடுகளுக்கான முக்கிய காரணம், ஒரு நெறி முறை, ஒரு ஒழுக்க முறை, ஒரு ஆத்மீகத் தரம் இல்லாமையே ஆகும்.

மனிதனின் பண்பாடுகளினதும், நாகரிகங்களினதும் வரலாறு அவனது சமயத்தின் வரலாறு ஆகும்.

பொதுவான நம்பிக்கையின்— சமயத்தின்— பிணைப்பைப் போன்று வேறு எதற்கும் ஒன்று படுத்தும் தன்மை இல்லை.

சகல மதங்களுக்கும் அந்தந்த மதகர்த்தர்களால், அவதாரங்களால் முன் கூறப்பட்டபடி அதனதன் ஆத்மீக பலமுள்ளவரை ஒன்றிணைக்கும்சக்தி இருந்ததாக சமய வரலாறு கூறுகின்றது.

இச்சக்தியாவது அந்[...] வர்களின் இதயங்களிலும் [...] படை உண்மை, முக்கிய ஆத்மீகத்தகைமை முதலியவற்றை அறிவுறுத்துவதன் மூலம் பாரிய பண்பாடுகளையும் நாகரிகங்களையும் அமைக்க மனித இனத்தைத் தூண்டும் உள்ளுணர்வின் ஒற்றுமையை ஸ்தாபிக்கின்றது.

சகல மதத் தலைவர்களும் அந்தந்த மதத்தை பின்பற்றுபவர்களும் புனித நம்பிக்கைகளில் உள்ள ஒத்த தன்மைகளை ஏற்றுக்கொண்டு, மனித இனத்தை எதிர்நோக்கும் சவால்களுக்கு ஓர் ஒன்றுபட்ட அணுகுமுறையைக்கண்டு, பின் அதை மனித இனத்தின் நுண்ணுடலில் ஊடுருவச் செய்ய, என்றும் வளர்கின்ற முறையில் அதைப் பிரயோகித்தல் வேண்டும்.

இதன்மூலம் உலகம் ஒரு நாடு, மனித இனம், அதன் பிரஜைகள் என்ற நிலையை காண வைக்க முடியும்.

''ஒற்றுமை எனும் ஒளி உலகம் முழுவதையும் சூழவும், ''அரசு ஆண்டவனுடையதே'' என்னும்முத்திரை அதன் மக்களனைவரின் நெற்றியில் பொறிக்கப்பட இறைவன் அருள்புரிவாராக'' என்ற தெய்வீக திருவாக்கைத் தினமும் கூறி ஆண்டவன் அருளை நாடுவோமாக.

### கிறிஸ்தவ மாணவர் நிலையம்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவமாணவர் நிலை[...] மணிக்கு திருநெல்வேலி [...]தியில் திறந்து வைக்கப்படும்.

# எக்குவடோர் ஜனாதிபதி நிபந்தனையுடன் விடுதலை

## கடத்தியவர் விடுத்த கோரிக்கை வெற்றி!

குவிட்டோ, ஜன. 17

எக்குவடோர்ஜனாதிபதியைக் கடத்திக் காவலில் வைத்திருந்த நால்வர் கொண்ட விமானப்படைக் கோஷ்டியினர் நிபந்தனையுடன் அவரை விடுதலை செய்தனர்.

ஜனாதிபதி லியோன் பப்ரிகோதரேயுடன்பாதுகாப்பு அமைச்சரும் விமானப்படைத் தளமொன்றில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டபோது இருவரும் கடத்தப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஜனாதிபதியின் பாதுகாவலர் உட்படப் 15பேர் பலியாகினர்.

கடந்த மார்ச் மாதம் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த விமானப்படைத் தளபதி ஜெனரல் கிராஜலை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கடத்தல்காரர்களின் நிபந்தனையை எக்குவடோர் அரசு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சரும் விடுவிக்கப்பட்டனர். (ஒ)

## மாணவியின் கண்ணில் கண்ணாடிக் கற்கள்!

டாக்கா, ஜன 17

19 வயது மாணவியின் இடது கண்ணில் இருந்து அரிசி அளவு கண்ணாடி போன்ற கற்கள் வெளிவருவதாக பங்களாதேஷ் டைம்ஸ் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை 170 கண்ணாடி போன்ற கற்கள் வெளிவந்துள்ளன என்று பங்களாதேஷ் ஆஸ்பத்திரி டாக்டர் முகமது மோராலிப் தெரிவித்தார்.

அந்த மாணவியின் பெயர் ஹஸ்நாத்ரா சந்தா. கண்களில் நோவு இருப்பதாகக் கூறியே இம்மாணவி ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

'நோவு காரணமாகக் கண்களை கசக்கியபோது கண்ணாடிப் பொருள் போன்ற சிறுகற்கள் வெளியே வரத்தொடங்கின'– என்று அந்த மாணவி டாக்டர்களிடம் சொன்னார். (ஒ-எ)

மாணவர் கிளர்ச்சி எதிரொலி

## சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராஜினாமா

பீகிங், ஜன 17

மாணவர் கிளர்ச்சியின் உச்சக் கட்டமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹூயோபங் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

சீனத் தலைமைப் பொறுப்புக்களைமீறி நடந்த குற்றத்தை ஒப்புக் கொண்டு திரு. ஹூயோபங் தனது பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

ராஜினாமாவை கட்சி அரசியல்குழு ஏற்றுக் கொண்டது.

எனினும் அரசியல்குழு உறுப்பினராக அவர் தொடர்ந்து இருப்பார்.

சீனத்தலைவர் டெங் ஷியா பெங்கின் வாரிசாக இவர் கருதப்பட்டு வந்தார்.

சீனமாணவர் கூடுதல் ஜனநாயக சுதந்திரத்தைக் கோரி அண்மைக் காலமாக நடத்திவந்த ஆர்ப்பாட்டங்களின் உச்சக்கட்டமாக பொதுச் செயலாளரின் ராஜினாமா அமைந்துவிட்டது. (ஒ-எ)

## இந்தியா கவலை தெரிவிப்பு

புதுடில்லி, ஜன. 17

வடபகுதிமீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மோசமடைந்து வரும் இனப் பிரச்சினை குறித்து இந்திய இணை அமைச்சர் நட்வர் சிங், இலங்கை அமைச்சர் காமினி திஸநாயக்காவிடம் கவலை தெரிவித்துக் கொண்டார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இணை அமைச்சர் ப. சிதம்பரத்தையும் அமைச்சர் காமினி திஸநாயக்கா சந்தித்தார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months
Weekend Classes
Fees: Rs 1500/-
Commencement 24th January 1987
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

# உதயன்

18 01 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Commencement 24th January
வகுப்புகளும், செய்முறைகளும்
பாதுகாப்பான இடத்தில்
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத
Practicals
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
வெளிநாடு செல்பவர்களுக்கோர் வரப்பிரசாதம்
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24204
13, Rasavinthodam Lane, Jaffna.

## வித்தாரம்

என்ன முரளியார்! ஆளிலை கொஞ்சம் வித்தியாசம் தெரியுது. ஏதாவது உடம்பு சரியில்லையோ அல்லது உள்ளம் சரியில்லையோ? வழமையான துடிதுடிப்பைக் காணயில்லை.

அட, பெற்ரோல் தட்டுப்பாட்டுக்குப் பிறகு மோட்டச் சைக்கிளைத் தொடுறதில்லை எண்டது எனக்குத் தெரியும். சைக்கிள் இருக்குது தானே. அந்த இரட்டைச் சில்லிலை ஏறினை தேவையான இடத்துக்குப் போய் வரலாமே. நீ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நடந்து பழகிறுயெண்டு சொல்லு. அது தான் நல்லது. தேகத்திலை இருக்கிற அசுத்தங்கள் எல்லாம் கழியும். உடல் உறுப்புகள் திடகாத்திரமாகும் ... முதல் பழக்கத்துக்குக் கொஞ்சம் கஷ்டம் தான்...!

எரிபொருள் தடை, தட்டுப்பாடு எண்டு செய்தியள் வந்தாலும் அதுகளுக்கு 'டிமிக்கி' கொடுக்க எங்கடை ஆக்கள் பின்நிக்கமாட்டினமே!

கொஞ்ச நாளாய் மறைஞ்சுபோய் இருந்த நடைபாதை பெற்ரோல் வியாபாரம் கடந்த இரண்டு நாளாய் பிறகும் தொடங்கிவிட்டுது.

உவைக்கு எங்கையிருந்து உது வருகுது? பெரிய மர்மமாய் இருக்கு.

எரிபொருள் தடை வந்து நாளைக்கு இருபது நாள். முதலிலை கொஞ்ச நாளாய் நடைபாதை எரிபொருள் நிலையங்களைக் காணயில்லை. இப்ப முளைச்சிட்டுதுகள்.

அதை விடு. வாகன ஓட்டமும் கடந்த இரண்டு மூண்டு நாளாய் முந்திய நிலைக்கு வந்தது போலைத் தான். நேற்றைக்கு மினி பஸ்ஸுகள், டாக்ஸியள், ஓட்டோக்கள் எண்டு பஸ் நிலையம் வழமையாய் வாகனங்களாலை நிரம்பி வழிஞ்சதைக் கண்டேன் அப்பா!

யு. டி. ஐ பிரகடனம், சிவில் நிர்வாக மாற்றம் எண்ட 'சென்சேசன்' வதந்தியளோடை வெளிநாட்டுப் பத்திரிகைக்காறர் எல்லாம் குடாநாட்டுக்குப் படை எடுக்கத் தொடங்கி விட்டினம்.

அவையளின்ரை கண், காது எல்லாம் மெத்தக் கூர்மையானவை எண்டது உனக்குச் சொல்லாமலே தெரியவேணும்.

எரிபொருள் தடையாலை பெரிய பாதிப்பு மாதிரித் தெரியயில்லையே. வாகனம் எல்லாம் ஓடத்தானே செய்யுது? கறுப்புச்சந்தையிலை பெற்ரோல் தாராளமாய்க் கிடைக்குதே. நானே அப்பிடி வாங்கிக் குடுத்துத்தானே பல இடங்களுக்குப் போய் ஆக்களைச் சந்திச்சேன். இப்படி ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் கேள்வி மேல் கேள்வி கேட்டார்.

அடுத்தவர் என்ன சொன்னுர் தெரியுமா? தான் கடந்த வருஷம் ஏப்ரல் மாதம் இஞ்சை வந்தபோது ஓடின வாகனங்களை விட இப்ப அதிக வாகனங்கள் ஓடுவதாகத் தாம் மதிப்பிடுவதாகச் சொன்னுர்!

இரண்டு பேரும் துருவிய விதம் எனக்கு விளங்கிவிட்டுது. அதாவது ஏதோ ஒரு வழியால் தடையை மீறி எரிபொருள் இஞ்சை வருகுதோ எண்டு கேட்டறியும் நோக்கம் அவைக்கு எண்டது விளங்கிவிட்டுது. நான் விட்டுக் குடுக்கயில்லை.

எரிபொருள் தடை வந்த உடனை அடி நிலத்துக்குப் போன எரிபொருள் இப்ப விலை உயர்வோடை மேலை வந்து மிதக்குது. அவ்வளவு தான் எண்டு சமாளிச்சு விட்டேன்.

அவை வந்து போன கொஞ்ச நேரத்திலை எனக்குள்ளை ஒரு யோசினை. அரசாங்கம் எரிபொருள் தடை போட்டிருக்கு இஞ்சை வாகனங்கள் ஓடுது அப்பிடி எண்டால் தடையை குடாநாட்டார் வென்று விட்டார்கள். அதாவது அரசாங்கம் தோத்துப் போச்சு. அரசாங்கம் தோத்ததை காட்டாமல் இருக்கத் தடையை நீக்குமா அல்லது ரோசம் தலைக்கேறி நீடிக்குமா? எதைச் செய்யப்போகுது எண்டு தலையை உடைக்க வேண்டியதாய்ப்போச்சு

ஆனல் வாகனங்கள் ஓடுது எண்டு சொல்லுறதுக்கு என்ன ...!

யாழ்ப்பாணப் பட்டினத்திலை போட்ட கடிதம் மூண்டு மைல் தூரத்திலை உள்ள ஆனைக் கோட்டைக்குப் போய்ச் சேர எட்டு நாள் எடுத்திருக்கு எண்டு நண்பர் ஒருவர் கவலைப்பட்டார்.

பருத்தித்துறையில் இருந்து மற்ருெரு அன்பர் அனுப்பிய கடிதம் கைக்குக் கிடைக்க ஆறு நாள் பிடிச்சுது!

பாத்தியே, அத்தியாவசிய சேவைக்கு எங்கடை ஆக்கள் குடுக்கிற மதிப்பை?

நாங்கள் எப்ப முன்னேறுவோம் ...? எப்ப திருந்துவோம்? கடவுளே நீ தான் காப்பாத்த வேணுமப்பா!

கொண்டோடி

எரிபொருள் தடை நீடித்தால்

## குடாநாட்டு நிலைமை மோசமடையும்

### என்கிருர் தொண்டமான்

திருச்சி, ஜன. 18

எரிபொருள் தடை மேலும் நீடித்தால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலைமை மோசமடையலாம்!

அமைச்சர் திரு.தொண்டமான் முன்சண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பு திரும்பும் மார்க்கத்தில் திருச்சி விமான நிலையத்தில் அமைச்சர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினுர்.

அப்போதே மேற்கண்டவாறு எச்சரித்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இந்தியாவின் நிலையும் இது தான்.

சமாதானத் தீர்வைக் காண ஆர்வம் உள்ள ஒவ்வொருவரும் சிங்களத் தலைவர்களும் முன்வந்து உழைக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் மேலும் சொன்னுர். (இ-எ)

### ஆனையிறவு----

(1ம்பக்கத் தொடர்ச்சி)

ரில் ஏற்றிச் செல்லப்பட்டதாக பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பொது மக்கள் பின்பு தெரிவித்தனர்.

சிப்பாய்கள் பின்பு முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

இறந்தோர் விவரம்:

1 குகன் (சண்முகம்) மந்துவில்

2 சதா (திமதி) இயக்கச்சி

3. சுமன் (ஜெயானந்தராஜா) முசுமாலை

4. அர்ச்சுனு (ஜெயபாலன்) கல்வயல்

5. ஜொனி (வி. தங்கராஜா) திருகோணமலை

6. அஜித் (ராஜன்)

எரிபொருள் தடைக்கு எதிராக

# சர்வதேச சமுதாயம் குரல் எழுப்ப வேண்டும்

## கூட்டணி அரசியல் குழு கோருகிறது

சென்னை, ஜன.18

வடபகுதிமீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடையை நீக்கும்படி சர்வதேச சமுதாயம் குரல் எழுப்ப வேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியல் குழு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்திருக்கிறது.

நேற்று சென்னையில் நடந்த அரசியல் குழு கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடபகுதிமீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடை அமைதிப் பேச்சுக்களுக்குக் குந்தகத்தையே விளைவிக்கும்.

இத்தடையை விதிப்பதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை.

ஏதுமறியாத சிவிலியன்களை இரக்கமற்ற முறையில் பாதிக்கும் விதத்தில் எரிபொருள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக சர்வதேச சமுதாயம் குரல் எழுப்ப வேண்டும்.

இத்தடையை உடனடியாக இலங்கை அரசு நீக்க வேண்டும்.

இப்படி கூட்டணி அரசியல் குழுவின் தீர்மானம் கூறியுள்ளது (இ-எ)

## அரசியல் தலையீடு இல்லாததே வடக்கில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடையக் காரணம்

அம்பாறை, ஜன.18

வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம் அரசியல் தலையீடுகளுக்கு மக்கள் இடமளிக்காததே.

இப்படி பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம்.பி.யுமான ஜனுப். அப்துல் மஜீத் தெரிவித்தார்

சம்மாந்துறை மகா வித்தியாலயத்தில் பல்கலைக் கழகப் புலமைப் பரிசில்களை சம்பந்தப்பட்ட மாணவருக்கு வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனுப் மஜீத் முன்கண்டவாறு சொன்னுர்.

ஜனுப். ஏ எல். உபைதுல்லா தலைமை வகித்தார்.

ஜனுப். மஜீத் மேலும் சொன்னதாவது;

யாழ். மக்கள் தங்கள் உழைப்பின் பெரும்பகுதியை தங்கள் குழந்தைகளின் நலன்களுக்குத் தான் செலவிடுகின்றுர்கள். அதனுல்தான் யாழ். மாணவரின் கல்வி வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது.

இப்படி ஜனுப். மஜீத் சொன்னுர். (இ-எ-14)

### மூளைக் காய்ச்சல்: 6 மாதக் குழந்தை பலி

கரவெட்டி, ஜன.18

கரவெட்டி தெடுத்தலைப் பகுதியில் ஆறு மாதக் குழந்தை ஒன்று மூளைக் காய்ச்சலுக்குப் பலியானது.

இக்குழந்தை மூளைக் காய்ச்சல் நோய் காரணமாக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தது.

சிறிது குணமடைந்து வீடு சென்ற இரண்டாவது நாள் குழந்தை இறந்து விட்டது.

இதே வேளை முல்லைத்தீவு வீரகத்திப்பிள்ளையார் கோவில் பூசகர் திருசெல்லையா கணபதிப்பிள்ளையும் (50 வயது) மூளைக் காய்ச்சலுக்குப் பலியானுர். (இ-70)

## ஆலாபனு ஆதரவில் இளம் கலைஞர்களை ஊக்குவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 18

புதிய கர்நாடக சங்கீத சபா 'ஆலாபனு'வின் ஆதரவில் முதலாவது இசையரங்கு இம்மாதம் 25 ஆம் திகதி நல்லை ஆதீனத்தில் இடம் பெறும்.

திரு. எஸ். சண்முகராகவனின் இசைக் கச்சேரி அன்று இடம் பெறும்.

மூத்த இசைக் கலைஞர், இசைப்புலவர் என். சண்முகரத்தினத்தின் புதல்வர் இவர் ஆவர்.

கடந்த பொங்கல் தினமன்று டாக்டர் கமிகாதரனின் இல்லத்தில் இப் புதிய சங்கீத சபா ஆரம்பிக்கப்பட்டது

சங்கீதவித்துவான்கள், ரசிகர்கள் ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாதா மாதம் நல்லை ஆதீனத்தில் வளரும் இசைக் கலைஞர் ஒருவரினதும் முன்னணி கலைஞர் ஒருவரினதும் இசைக் கச்சேரியை குறிப்பிட்ட தினத்தில் நடத்துவது என்று சபா தீர்மானித்தது.

சபாவின் அமைப்பாளர்களாக யாழ் பல்கலைக்கழக சங்கீத விரிவுரையாளர் திரு. ஏ. கே. கருணுகரன், இளைப்பாறிய அதிபர் சங்கீத வித்வான் திரு. எஸ். பரம் தில்லைராஜா ஆகியோர் பணிபுரிவர். (இ-எ)

### ஐவர் தவிர ஏனையோர் விடுதலை

அம்பாறை, ஜன. 18

தைப்பொங்கல் அன்று காரைதீவில் அட்டபள்ளம் பகுதியில் ஆயுத படையினரால் கைது செய்யப்பட்ட சுமார் ஐம்பது தமிழர்களில் ஐவரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டு விட்டனர். (இ-எ-14)

## சங்கீத நாட்டியம் மூலம் ஜெய்ப்பூர் தொழிற்சாலை நிறுவ நிதி திரட்டப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 18

கால் இழந்தவர்களுக்கு செயற்கைக் கால் பொருத்தும் ஜெய்ப்பூர் தொழிற்சாலை ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக நிதி திரட்டுவதற்காக யாழ். வைத்திய மாணவர் சங்க ஆதரவில் சங்கீத நாட்டிய நிகழ்ச்சி ஒன்று இம்மாதம் 31 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

தொழிற்சாலை அமைக்க மூன்றரை லட்சம் ரூபா தேவைப்படுகின்றது.

இப் பணிக்கு அன்பர்கள் அனைவரும் உதவ வேண்டும் என்று அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (இ-எ)

### சார்ஜண்ட் எங்கே

கொழும்பு, ஜன.18

பொரலஸ்கமுவபொலிஸைச் சேர்ந்த சார்ஜண்ட் பிரேமசிரி என்பவர் கடந்த மாதம் 25 ஆம் திகதியிலிருந்து காணுமல் போய்விட்டார்.

அவர் மகரஹமவாசி. அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி விசாரணை செய்து அறிவிக்கும்படி மகரஹம பொலீஸில் அவரின் மனைவி முறையிட்டிருக்கிறுர். (இ-எ-21)

### கல்விப் பணிப்பாளரின் தொலைபேசி

யாழ்ப்பாணம்,ஜன,18

யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளருக்குரிய நேரடித் தொலைபேசி இலக்கம் 22554 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களத்துக்குரிய பொதுத் தொலைபேசி இலக்கம் 23555 என்பதாகும்.

இந்த இலக்கத்தினூடாக கல்வித் திணைக்களத்தில் உள்ள சகல பிரிவுகளுடனும் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பணிப்பாளரின் [illegible] தொலைபேசி [illegible] இலக்கம் 22248 ஆகும். (இ-எ)

## ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்பு 3 ஆண்டுகளாக்க யோசனை

கொழும்பு ஜன 18

ஜி சி.ஈ உயர்தரப்படிப்பை மூன்று ஆண்டுகளாக அதிகரிக்கும் படி கல்வி அமைச்சுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகமானியக்குழு ஒழுங்கு செய்த தேசியக் கருத்தரங்கு ஒன்றில் இச்சிபாரிசு செய்யப்பட்டது.

யுனெஸ்கோவின் ஆசிய பசுபிக் கல்வி பிராந்திய அலுவலகம், இலங்கை பவுண்டேஷன் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

ஜி.சி.ஈ சாதாரண படிப்புக்கான பாடத்திட்டத்துடன் ஒப்பிடும் போது ஜி சி.ஈ உயர்தர பாடத்திட்டம் விரிவாக்கப்பட வேண்டும் என்று அச் சிபாரிசில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

90 சதவீத மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுவது இல்லை என்பதை கருத்திற் கொண்டு உயர் கல்வி ஸ்தாபனங்களின் ஆலோசனையுடன் ஜி சி.ஈ உயர்தர வகுப்புககான பாடத்திட்டத்தை மாற்றி அமைக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படிக் கேட்டுக் கொள்ளும் சிபாரிசு ஒன்றும் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டது. (இ-எ)

### தேசிய---

(-1ம் பக்கத்தொடர்ச்சி)

ம்பு வட்டாரங்ள் தெரிவித்தன.

இந்தச் சூழ்நிலையில் நாளை திங்கள கூடும் தேசியப் பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் இது குறித்து முக்கிய முடிவு ஒன்று எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடபகுதி மீது எரிபொருள் தடை விதிக்கப்பட்டு இன்றுடன் (ஞாயிறு) 20 தினங்களாகின்றன. (இ-எ)

### சிப்பாய்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ருந்த பொதுமக்களிடம் இப்படித் தெரிவித்தனராம்.

புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சில துப்பாக்கிகளையும் பொது மக்களுக்கு [illegible] காட்டினராம். (இ-10)

## பேச்சைத் தொடர. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இணை அமைச்சர் சிதம்பரம் இறுதியாக டிசம்பர் 19-ஆம் திகதி ஜனுதிபதி ஜெயவர்த்தனவுடன் பேச்சுக்கள் நடத்திய போது அம்பாறைத் தொகுதிஇல்லாதகிழக்கு மாகாண சபை அமைக்கும் யோசனை உதயமானது.

அந்த யோசனை அடங்கிய தஸ்தாவேஜில் சம்மதத்துக்கு அறிகுறியாக ஜனுதிபதியின் சுருக்கக் கையொப்பத்தையும் வாங்கிக் கொண்டே சிதம்பரம் குழு, புதுடில்லி திரும்பியது அதன் பின்னர் போராளிகளைச் சந்திக்கவும் திட்டமிட்டிருந்தது.

ஆனல் ஜனுதிபதி ஜெயவர்த்தன டிசம்பர் 22இல் இந்தியத் தூதருக்கு அம்பாறை இல்லாத கிழக்கு மாகாணசபை யோசனையைத் தான் கைவிடுவதாக அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து இந்திய இணை அமைச்சர்கள் தமிழ் நாடு விஜயத்தைத் தள்ளிப்போட்டனர். அத்துடன் சேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

பின்னர் வடபகுதிமீது இலங்கை எரிபொருள் தடை விதித்தது.

இரண்டு விஷயங்களும் பழைய நிலையை அடையுமாஞல்தான் இந்தியக் குழு மேலும் பேச்சுக்களை தொடரும்—

இப்படி அமைச்சர் காமினி திஸாநாயக்காவுக்கு புதுடில்லியில் வைத்துத் தெரிவிக்கப்பட்டதாக மத்திய அரசு வட்டாரங்கள் மூலம் மிக நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது. (அ-எ)

## பிரதேசசபை தேர்தல்

### ஸ்ரீ. ல. சு. க. பங்குபற்றுமா?

கொழும்பு, ஜன. 18

எதிர்வரும் ஏப்ரலில் அரசாங்கம் நடத்த உத்தேசித்துள்ள பிரதேச சபைத் தேர்தலில் பங்கு பற்றுவதா? இல்லையா?

இது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உப குழு ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நியமித்துள்ளது.

கட்சியின் நிறைவேற்றுக் குழு நேற்று கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

அக் கூட்டத்திலேதான் உப குழு நியமிக்கப்பட்டது. (இ-எ)

### வீதிகளுக்கு--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஙங்கள் யாழ். குடாநாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகவே முக்கியமாக இந்த குழிகள் வெட்டப்பட்டுள்ளன என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது (இ-10)

### சிங்கள---

1 ம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களைப் பொறுப்பேற்பது பற்றி ஸ்ரீலங்கா மக்கள் கட்சி இன்னும் முடிவு செய்யவில்லை.

கட்சிப் பிரமுகர் ஒருவர் கொழும்பில் இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

### எம். ஜி. ஆர். 70வது பிறந்த தினம்

சென்னை, ஜன. 18

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தனது 70 ஆவது பிறந்த தினத்தை நேற்று அமைதியாகக் கொண்டாடினுர்.

அமைச்சர்கள், ஆதரவாளர்கள் அவரின் இல்லத்துக்குச் சென்று அவருக்குவாழ்த்துக்கூறினர்.

ஆலயங்கள், தேவாலயங்களில் விசேஷ வழிபாடுகளும் நடத்தப்பட்டன. (இ-எ)

## விளையாட்டரங்கு

## 10 ஒட்டங்களால் இந்தியா வென்றது

பம்பாய், ஜன. 18

ஐந்தாவது இறுதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, இலங்கையை 10 ஓட்டங்களினுல் வெற்றியீட்டியது.

இந்த ஒருநாள் பந்தயப் போட்டித் தொடரில் இந்தியா நான்கு போட்டிகளில் வெற்றியீட்டியது இலங்கை அணி ஒரு போட்டியில் மட்டுமே வென்றது

நேற்று நடந்த ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 40 ஓவர்களில் 4 விக்கட்டுக்கள் இழப்புக்கு 299 ஓட்டங்கள் எடுத்தது

இப்போட்டித் தொடரில் இது ஒரு சாதனை என்று வர்ணிக்கப்பட்டது

இலங்கை அணி 7 விக்கட்டுக்கள் இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்தது.

இலங்கை வீரர் ரோஷன் மகாநம 181 நிமிடங்களில் 98 ஓட்டங்கள் எடுத்தார்..

இந்திய வீரர் அஸாருதீன் 108 ஓட்டங்களை எடுத்தார். பின்னர் வெங்கஸ்காருடன் சேர்ந்து 115 ஓட்டங்களைக் குவித்தார். இது நேற்றைய பந்தயத்தின் சிறப்பம்சம் என்று கூறப்பட்டது

இலங்கை வீரர் ரோஷன் மகாநம நேற்று நடந்த ஆட்டத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். (இ-எ)

## வீடு உடன் வாடகைக்கு

கொக்குவிலில் கே. கே. எஸ், வீதிக்குச் சமீபமாக மிக வசதியான பெரியவீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. மின்சாரம், தண்ணீர், தொலைபேசி வசதிகள் உள்ளன.

பொறியியலாளர், கணக்காளர், டாக்டர் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு கொள்க: விளம்பர இல: 105 மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 18 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 18 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 18 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 69 N 86 தொலைபேசி. 24805, 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org